RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt21s129

# ஜெயமோகனின் கூந்தல் சிறுகதையில் பெண் பாலின அமுக்கம்

**ச. சரண்யா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி ஆத்தூர்-636121, சேலம், தமிழ்நாடு, இந்தியா.

# Female Gender Compression in Jayamohan's hair short story

**S. Saranya** [a, *]

[a] Department of Tamil, Arignar Anna Government Arts College, Attur–636121, Salem, Tamil Nadu, India.

* Corresponding Author: priyankachandran3535@gmail.com

Received: 04-11-2020
Revised: 13-06-2021
Accepted: 16-06-2021
Published: 19-06-2021

**ABSTRACT**

Marriage is an integral part of society. This marriage can determine a woman's life but it can darken life if she loses her hunband various atrocities are carried out on the widow as a ritual. Even more bald is the cruelty of the event Jayamohan's recordings in the hair short story. Reveal the situation and mental state of widow who refuses to make the the effort to suffer the loss of her husband both physically and mentally as she is denied even the right to keep her hair.

**Keywords:** Jayamohan, Palina Amukkam, Widow, Thalai Mayirai Malithal.

## முன்னுரை

இனக்குழு சமுதாயத்தில் தாய் தலைமை பெற்றிருந்த காலம் ஒன்றிருந்தது. அவள் முக்கியமான வேலைகளைக் கவனித்து வந்தாள். ஆடவர் வனங்களில் சுற்றித் திரிந்து விலங்குகளை வேட்டையாடிக் கொண்டு வந்த பொருட்களை எல்லாம் அனைவரும் பகுத்துண்டனர். ஆடவர் இயற்கையை எதிர்த்துப் போராடியபோது வில்லையும், அம்பையும், கொத்து வாளையும் காட்டு விலங்குகளைப் பிடிக்க கயிறையும் கண்டுபிடித்தான். இதனால் உற்பத்தி முறைகளிலே மாற்றம் ஏற்பட்டது. பெண்ணின் பேச்சுக்கள் எடுபடவில்லை. அன்று முதல் ஆடவன் பெண்டிரைப் பின்னிலைக்குத் தள்ளினான்.

திருமணத்திற்கு முன்பும் சரி, பின்பும் சரி ஒரு ஆணின் கட்டுப்பாட்டில்தான் அவள் கண்காணிக்கப்படுகின்றனர். அவள் தனித்துவமாக முடிவெடுப்பதற்கு அனுமதியில்லை என்றே கூறலாம். அதுவும் திருமணத்திற்குப் பின்பு ஒரு ஆணின் கட்டுப்பாட்டிற்குள் அடிமையாகி விடுகின்றாள். கணவன் இறந்த பின் பெண்ணுக்கு பூ, பொட்டு, வளையல்கள் ஆகிய உடைமைகள் பறிக்கப்படுகின்றன. தலைமயிர் இருப்பதற்குக் கூட உரிமை மறுக்கப்பட்டு மொட்டையடித்துக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. மேலும், வீட்டிலிருந்து விலக்கப்பட்டு, அமலங்கலச் சின்னமாக சித்தரித்து பல கொடுமைகளுக்கு ஆளாகுகின்றாள். இதுபோன்ற ஒரு நிகழ்வை ஜெயமோகன் அவர்களின் கூந்தல் சிறுகதையில் ஒரு பெண் தலைமயிரால் எவ்வளவு மனச்சிக்கலுக்கு ஆளாகுகிறாள் என்பதைக் காணலாம்.

## பாலின வேறுபாடு

காலங்காலமாகத் தொன்று தொட்டு வரும் சமுதாயத்தில் ஆண் ஆளப்பிறந்தவன், பெண் என்பவள் அவனுக்கு அடங்கி வாழப் பிறந்தவள் என்ற கொள்கைகள் வழிவகுத்து வந்துள்ளன. சிறு வயதிலிருந்தே ஆண் குழந்தைக்குத் தன்னம்பிக்கையும், சுதந்திரமும், பெண்களுக்கு அடிமைத்தனமும், குடும்ப வாழ்வியல் முறைமையும் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. உன்னுடைய மனக்கிடக்கையைச் சாதித்துக் கொள்ள ஒரு ஆணின் துணை அவசியம் இருக்க வேண்டும். மேலும் அவன் மூலமாகத்தான் நீ உன்னுடைய விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்று கூறப்படுகின்றது.

குழந்தைகள் விளையாடுகின்ற விளையாட்டுச் சாமான்களில் ஆண் குழந்தைக்குத் தனியான விளையாட்டுப் பொருட்கள் பெண் குழந்தைக்குத் தனியாக விளையாட்டுப் பொருட்கள் எனப் பிரித்துக் கொடுக்கப்படுகின்றன. இதில் ஆண் குழந்தைக்குக் குதிரைமேல் சவாரி செய்வது, வானூர்தி போன்ற விளையாட்டுப் பொருட்கள், பெண் குழந்தைக்குப் பொம்மைக் கல்யாணம் செய்யப்பட்ட பொம்மைகளும், வாணலி, அடுப்பு போன்ற பொம்மைகளுமே அளிக்கப்படுகின்றன. இவ்வாறாக இளவயதிலேயே வேறுபடுத்தி வளர்க்கப்படும்போது, ஆண் பெண்ணுக்கான தகுதிகள் கடமைகள், தேவைகள் போன்றவற்றை இச்சமூகம் உணர்த்திவிடுகின்றது.

சிறுவர்களாக இருக்கின்ற ஆணும், பெண்ணும் பெரியவர்களானதும் ஆண் தன்னுடைய சகோதரியின் மேல் அதிகாரம் செலுத்தக் கற்றுக் கொள்கிறான். இதுவே நாளடைவில் ஆண் அதிகாரம் செலுத்துவதற்கு அடிப்படையாக அமைகின்றது. பெண் பிள்ளை ஒவ்வொரு வினாடியும் கட்டளைக் கீழ்படிதலும் மற்றவர்களுக்குப் பணிவினை செய்வதும் கற்க வேண்டியிருக்கின்றது. ஆகவே பெண் பிள்ளையானவள் விற்பனைக்காகத் தயாரிக்கப்பட்ட மண்பாண்டமாகவே காணப்படுகின்றாள்.

இவ்வாறு பல உருவங்களிலம், வடிவங்களிலும் பெண்ணினம் எவ்வாறு வஞ்சிக்கப்பட்டு சுரண்டப்படுகிறது என்பதற்குத் தூண்டுகோலாக இருப்பதே 'பால் வாழ்வில் ஆணாதிக்கம்' ஏற்பட்டதேயாகும்.

ஆணின் தலைமைக்கு இறுதித் தடைக்கல்லாக நின்ற பெண் எதிர்ப்பும் வீழ்ச்சியுற்று அவனே குடும்பத்துக்குத் தலைவனாகி ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினானான். ஆணின் ஆதிக்கத் தொடங்கியமையால் பெண்ணடிமைத்தனம் உருவாயிற்று.

## விதவை பெண்ணின் நிலை

கணவனை இழந்த பெண்ணை போகப் பொருளாகவும், அடிமைப் பொருளாகவும் பார்க்கப்பட்டு அமங்கலப்பொருளாக உருவகம் செய்யும் கொடுமைகள் நித்தமும் நிகழ்த்துகிறது. கணவன் இறந்துவிட்டபோது அந்தப் பெண்ணே கொலை செய்தவளைப் போல கொடுமையாய் நோக்குகிறது. 'கணவனே இழந்த பெண்களை விதவையர், கைம்மையர், அறுதலி, முண்டச்சி, நூலியிழந்தோர், அமங்கலி முதலிய பல பெயர்களில் அழைக்கப்படுகின்றனர்.

## கூந்தல் சிறுகதையில் விருப்பமும் விளைவும்

கூந்தல் சிறுகதையில் மிஸஸ் நீலாவிற்குத் தலைமயிர் அதிகமாக காணப்படுகின்றது. தலைமுடியின் பின்னால் மலைப்பாம்பு போன்றுள்ளது. கொண்டை போட்டால் கழுத்துவலிக்கும். அவ்வளவு பெரிய கூந்தல் இருந்தால் சளி பிடிக்கும் என்பார்கள் இருந்தாலும் என்னுடைய கூந்தல் மீது எனக்கு விருப்பம் அதிகம் என்றாள் (Jeyamohan, 2013).

"என் கூந்தலை விதவிதமாகக் கற்பனை செய்து கொள்வேன். பட்டாம்பூச்சி சிறகுகள் போன்று காணப்படும் தலைமயிர் விழுதுகளாக மண்ணில் இறங்கி பரவி வேரோட ஆலமரக்கிளைகள் போன்று விரிந்திருக்கும் இப்படிப்பட்ட அழகுள்ள என் கூந்தலை கணவன் இறந்தமையால் மழிக்கின்றன. (Jeyamohan, 2013).

கணவன் இறந்தபின்பு பெண்ணுக்குக் கூந்தல் வைத்துக்கொள்ளும் உரிமை மறுக்கப்படுகின்றது. இதனை, "கூந்தல் கொய்து குறுந்தொடி நீக்கி" எனப்படுகின்றது (Avvai Su., Duraisamy Pillai 1972).

கணவனை இழந்த பெண்ணுக்குக் கூந்தல் இருத்தல் கூடாது. அதனை மழித்துக்கொள்ள வேண்டும் என்று கைம்மை நிலையை புறநானூறு பாடலடி உணர்த்துகின்றது.

ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை நாவிதனின் மனைவி என் தலைமயிரை மழிப்பாள். நாளைக்கு வெள்ளிக்கிழமை என் தலைமயிரை மீண்டும் மீண்டும் தொட்டுப் பார்க்கிறேன். நாளைக்குப் புழக்கடையில் தொழுவத்துக்கு வந்து காத்திருப்பாள். நான் வேண்டாம் என்றாலும் அதைப் பொருட்படுத்தாமல் என்னுடைய தலைமயிரை மழிப்பாள் இதேபோன்று கைம்பெண்ணானவளுக்கு விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் மொட்டை அடித்தனர். இவ்வாறு விருப்பமின்மையாலும், கட்டாயப்படுத்துவதிலும் தலைமயிரை மழித்து ஒதுக்கி வைத்தனர் (Jeyamohan, 2013; Govindasamy, 2012).

## நீலா மனச்சிக்கலுக்கலுக்கு ஆளாதல்

என் தலைமயிர் சீக்கிரமே வளர்ந்துவிடும். ஏனெனில், நாவிதம்மாள் தலைமயிரை மழித்துவிட்டு போகும்போதே என் தலையில் முடி வளர்வதன் அரிப்பு தொடங்கிவிட்டது போல இருக்கும். தொட்டு தொட்டு பார்த்துக்கொள்வேன். இரவில் இருட்டுக்குள் முடி வளரும். அசைவைக்கூட உணரமுடியும் என்று தோன்றும். மறுநாள் கம்பளியைத் தொட்டது போன்று காணப்படும். ஆகையால் முக்காடு இழுத்துப் போட்டுக்கொள்வேன். நீண்ட கூந்தல் குடும்பத்துக்கு கெடுதல் என்றும் தாசிக்கு மட்டும் தான் நீண்ட கூந்தல் இருக்கலாம் என்று குடும்பத்தார்கள் கூறும்போது என்னுடைய முடியை நானே சபிப்பேன்.

இத்தனை தலைமயிர் எங்கிருந்து வருகிறது என்ற எண்ணம் எனக்குள்ளேயே உண்டாகும். உடம்புக்குள்ளும் எல்லாம் கரிய தலைமயிர்கள் நிரம்பியிருக்கிறதா? அது தலையைத் துளைத்து வெளிவருகிறதா? என்றெல்லாம் நினைப்பேன்.

இவ்வாறெல்லாம் நீலா தனக்குள்ளேயே கேள்விகளை கேட்டுக்கொண்டு மனதிற்குள்ளேயே வேதனையை அழுத்திக்கொள்கின்றாள்.

இதனை, "அமுக்கம் என்பது ஏற்பிலாக் கருத்துக்களை உள்ளுக்குள் உள்ளுவதைக் குறிக்கும். அகச்சார் கருத்துக்களைச் செயலற்றவையாக்க வேண்டி பண்பாட்டு விழுமியங்களை வெளிப்பாட்டிற்கு உட்படுத்தா வண்ணம், உள்ளுக்குள் தள்ளி வைக்கும் உளநிகழ்வே அமுக்கம் எனப்படுகிறது" (Sigmund Freud, 2005) தனக்குள்ளேயே புழுங்கிக்கொண்டம், வேதனையடைந்து, மனச்சிக்கலுக்கு ஆளாகிறாள் என்பதை இப்பதிவுகள் மூலம் அறியலாம்.

## முடிவுரை

சமூகத்தில் கணவனை இழந்த பெண்ணிற்குப் பூ, பொட்டு, வளையல் ஆகிய உடைமைகள் பறிக்கப்பட்ட போதிலும், தலைமயிர் வைத்திருக்கும் உரிமையும் மறுக்கப்படுகின்றது. இம்மாதிரியான நிலைகள் பிராமணியத்தில் தான் கணவனை இழந்த பெண்ணுக்கு கூந்தலை மழிக்கப்படுகின்றது. இன்றைய கால கட்டத்திலும் சில குடும்பங்களில் மட்டும் கைம்மைக்குத் தலைமயிரை மழிக்கும் அவலநிலை ஏற்படுகின்றது. இந்த மாதிரியான சூழ்நிலைகள் பெண் எவ்வளவு மனச்சிக்கலுக்கு ஆளாகுகிறாள் என்பதை ஜெயமோகனின் கூந்தல் சிறுகதை உணர்த்துகிறது.

## References

Avvai Su., Duraisamy Pillai, (1972) Purananuru, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Chennai

Govindasamy, V., (2012) Samuthaya valarchiyum pengalum, New Century Book House, Chennai, India.

Jeyamohan, (2013) Jeyamohan Sirukathaigal, Natrinai Pathippagam, 1st edition, Chennai, India.

Sigmund Freud, (2005) Sigmund Freud Ulappaguppaaivu, 1st edition, Alaigal veliyeetagam, Chennai, India

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL
**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License